[1972 மார்ச் 14

பொதுப் பணித் துறையிலுள்ள ஸ்பெஷல் மேஸ்திரிகள்

*488. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித் துறையில் பணியாற்றும் ஸ்பெஷல் மேஸ்திரிகள் சுமார் 5,000 பேர்கள் வேலை நிதியிலிருந்து work charged ஊதியம் பெற்றவர்களாக இருந்தவர்களை அரசு ஊழியர்களாக 24—11—1970 முதல் ஆக்கியும், இவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு எதும் செய்ய வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) வேலை நிதி யிலிருந்து ஊதியம் பெற்று அரசு ஊழியர்களாக 24—11—1970 முதல் ஆக்கப் பட்டவர்களுக்கு இரண்டாவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் சிபார்சுபடி கீழ்க் கண்ட அரசாணைகளில் ஊதியமாற்றம் அளிக்கப்பட்டுள்ளது.

1. அரசாணை எண் 222, நிதித் துறை, தேதி 8—2—1971.

2. அரசாணை எண் 651, நிதித் துறை, தேதி 4—5—1971.

3. அரசாணை எண் 873, நிதித் துறை, தேதி 16—6—1971.

மேற்கண்ட ஆணைகளில் சேர்க்கப்படாத வேறு சில பதவிகளைக் குறித்து ஊதிய மாற்றம் செய்யும் கோரிக்கை அரசின் பரிசிலனையிலுள்ளது.

பாலாற்றிலிருந்து நீர் பெறும் ஏரிகள்

* 489. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை ஏரிகளுக்கு மழை காலத்தில் பாலாற்றிலிருந்து நீர் வருகின்றது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வட ஆற்காடு மாவட்டத்தில் 289 ஏரிகளுக்கு மழை காலத்தில் பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாற்று நீர்ப் பாசனம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாற்றுக்கு வருகிற தண்ணீரை எல்லா ஏரிகளுக்கும் பயன் படுத்துவதற்குரிய சிறப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 14]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிறப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. நா. வீராசாமி : பாலாற்றிலிருந்து வருகிற தண்ணீர் 289 ஏரிகளுக்கும் பாய்வதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தப் பாலாற்றில் மணல் ஒரு பக்கம் போய், அந்தப் பக்கம் மேடாகவும் இன்னொரு பக்கம் பள்ளமாகவும் இருப்பதனால், தண்ணீர் சில ஏரிகளுக்குத் தான் போகிறது. மணல் மேடாகிவிட்ட பகுதிகளுக்கு தண்ணீர் போவதில்லை. கலவை ஏரிக்கு தண்ணீர் வருவதில்லை. பள்ளம், மேடு இல்லாமல் மணலை சரிப்படுத்தி, எல்லா ஏரிகளுக்கும் சமமாகத் தண்ணீர் வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 289 ஏரிகளுக்கு இப்பொழுது தண்ணீர் வந்ததாகத் தெரிகிறது. மொத்தம் 71,680 ஏகரா பாசனம் செய்யப்படுகிறது. குறிப்பிட்ட குறைபாடுகள் இருக்குமானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுகிறேன்.

திரு. கே. எ. வகாப் : பாலாற்றிக்குக் குறுக்கே வாலாஜா அருகில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. பழைய காலத்தில் கட்டப்பட்ட அணையாக இருக்கிற காரணத்தினால் பழுதடைந்திருக்கிறது. அதைப் பழுது பார்த்தால் இன்னும் நூற்றுக்கணக்கான ஏரிகளுக்கு அதிகப்படியான தண்ணீர் அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அந்த அணையை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வாலாஜா அணையைப்பற்றி என்னிடம் குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தாலுகாவில் பாக்கம் ஏரிக்கு வருகிற தண்ணீர் கால்வாயை தனிப்பட்டவர்கள் ஆழப்படுத்தியுள்ளார்கள். அது மாத்திரமல்ல. அந்த ஏரிகளைப் பல பேர் விவசாய நிலமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து, கால்வாயில் சரியாக தண்ணீர் வருவதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளின் ரிவர் பெட் அண்டு டாங் பெட் இவைகளை என்குரோச்மெண்டு செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கால்வாயை ஆக்கிரமித்து விவசாயம் செய்பவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.